DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: STC.No. 322/2018**

Deposition of witness for Prosecution அ.சா.8

Name : உலகநாதன்
Father/ Husband Name : வெள்ளைச்சாமி
Village :
Taluk :
Calling :
Age :

எதிரி ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 12.11.2025.
**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் கடந்த 31.12.2017-ம் தேதி சார்பு ஆய்வாளர் பணியில் இருந்து பணிநிறைவு பெற்றுள்ளேன். கடந்த 20.03.2017-ம் தேதி பிற்பகல் தேவகோட்டை நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது முற்பகல் மதுரை அப்போலோ மருத்துவமனையிலிருந்து தகவலின் அடிப்படையில் 16.30 மணிக்கு மதுரை அப்போலோ மருத்துவமனை சென்று வாகன விபத்தில் காயம் பெற்று சிகிச்சையில் இருந்த மானம்புவயல் கிராமத்தை சேர்ந்த கருப்பன் மகன் கருப்பையா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் கடந்த 17.03.2017-ம் தேதி 18.45 மணிக்கு தனது இரு சக்கர வாகனம் TN 63 Q 3738 வாகனத்தில் தனது பேத்தியான பட்டியல் சாட்சி 2 ரம்யா என்பவரை காரைக்குடி சூடாமணிபுரம் ஏற்றிக் கொண்டு தனது கிராமத்திற்கு வரும்வழியில் தேவகோட்டை சென்மேரிஸ் மேல்நிலைப்பள்ளி எதிரில் தேவகோட்டை - காரைக்குடி மெயின் ரோட்டில் இடதுபுறம் வந்துகொண்டிருக்கும் போது தனக்கு பின்னால் வந்த அரசு வாகனம் அதிவேகமாகவும், அஜராக்கியதையாகவும், ஆரன் அடிக்காமலும் ஓட்டிவந்து தனது இருசக்கர வாகனத்தில் மோதியதில் தனக்கும், தனது பேத்தியான ரம்யாவிற்கும் காயங்கள் ஏற்பட்டு விட்டதாகவும் முதலில் தேவகோட்டை அரசு மருத்துவமனையில் முதலுதவி பெற்றும் பின் காரைக்குடி காவேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றும் அன்றைய தினமே மதுரை அப்போலோ

மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தது பற்றியும விசாரித்ததில் தனது வாகனத்தில் அரசு பேருந்தில் TN 63 N 1734 வாகனத்தை கண்ணன் என்பவர் ஓட்டிவந்து மோதியதாக கேள்விப்பட்டதாக கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்து அவரிடம் வாசித்து காண்பித்தேன். அவர் சரி என்று ஒப்புக் கொண்டு தனது இடதுகை கட்டை விரலில் காயங்கள் ஏற்பட்டு இருந்ததால் வலது கை கட்டை விரலில் பதிவு செய்தார்.

2. அந்த வாக்குமூலத்தில் அ.சா.2 ரம்யாவும் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தார். இந்த வாக்குமூலத்தின் பேரில் 20.03.2017--ம் தேதி 19.30 மணிக்கு தேவகோட்டை நகர் காவல் நிலையம் வந்து தேவகோட்டை நகர் காவல் நிலைய குற்ற எண்.189/2017 இதச பிரிவுகள் 279, 337-ன் வழக்கு பதிவு செய்தேன். **(மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இரவு நேரமானதால் மறுநாள் 21.03.2017-ம் தேதி காலை 07.30 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடமான சென்மேரிஸ் மேல் நிலைப்பள்ளியின் எதிரே தேவகோட்டை- காரைக்குடி மெயின் ரோட்டில் சாட்சிகள் ராமச்சந்திரன் மற்றும் நாகப்பன் ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். **(மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** சாட்சிகள் 3 முதல் 10 வரை உள்ளவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. அன்றைய தினம் 11.00 மணிக்கு இவ்வழக்கின் எதிரி கண்ணன் அவர்கள் நிலையத்தில் ஆஜரானவரை கைது செய்து இரு நபர் ஜாமீனில் விடுவித்தேன். அரசு வாகனம் TN 63 N 1734 யை தகுந்த ஆவணங்களை பெற்று கொண்டு காரைக்குடி வாகன ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். அன்றைய தினம் அப்போலோ மருத்துவமனை சென்று வாதி மற்றும் பட்டியல் சாட்சி 2 ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 23.03.2017-ம் தேதி விபத்துக்குள்ளான வாதியின் வாகனம் TN 63 Q 3738 வாகன ஆய்வாளர் காரைக்குடி அவர்களின் ஆய்விற்காக அனுப்பிவைத்தேன். 08.04.2017-ம் தேதி மேற்படி இரு வாகனங்களையும் ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ராஜேஷ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினம் மதுரை அப்போலோ சென்று வாதிக்கும், பட்டியல் சாட்சி 2 ரம்யாவுக்கும் காயச் சான்று பெற்று சிகிச்சையளித்த மருத்துவர்கள் திரு.பரத்

மற்றும் சவரிஸ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வாதிக்கும் பட்டியல் சாட்சி 2 ரம்யாவுக்கும் ஏற்பட்டகாங்கள் கொடுங்காயங்கள் என மருத்துவ அதிகாரிகள் சான்று வழங்கியபடியால் வழக்கின் சட்ட பிரிவை இதச பிரிவுகள் 279, 337லிருந்து 279,338 இதச ஆக சட்டபிரிவு மாற்றம் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(மேற்படி சட்டபிரிவு மாறுதல்அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**4.** பின்னர் 09.06.2017-ம் தேதி இவ்வழக்கில் விசாரித்த சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் சான்றாவணங்களின் இருந்தும் எனது புலன் விசாரணையிலிருந்தும் இவ்வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட திரு.கண்ணன் அவர்கள் அரசு வாகனம் TN 63 N 1734 யை அதிவேகமாகவும், அஜராக்கியதையாகவும் ஓட்டிச் சென்று வாதியின் வாகனம் TN 63 Q 3738 யை மோதி வாதிக்கும், அறிவேன் சாட்சி 2க்கும் கொடுங்காயங்கள் ஏற்பட்டது உண்மையென தெரிந்த படியால் 09.06.2017-ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து தேவகோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் வாதி கொடுத்த பொய்யான புகாரை முறையாக புலன் விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் பட்டியல் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றும ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டவை என்றும் சொன்னால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. காயம்பட்டவர்கள் விபத்து இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக இந்த புகாரை பொய்யாக கொடுத்துள்ளார்கள் என்றும் அதை முறையாக விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடைபெற்ற ரோடு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் குண்டுகுழியுமாக இருந்தது என்றால் ஞாபகமில்லை.

2. புகாரில் எதிரி ஓட்டி வந்த பேருந்து பின்னால் இருந்து வந்ததாக தான் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். புகாரில் எதிரியையோ , பேருந்தையோ நேரடியாக பார்த்ததாக சொல்லவில்லை என்றும் யாரோ சொல்லி

கேள்விப்பட்டதாக தான் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். என்னுடைய விசாரணையில் புகார்தாரருக்கு மேற்படி விவரம் யார் மூலம் தெரிந்தது, எவ்வளவு நேரம் கழித்து தெரிந்தது என்பதை தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். வாகனத்தை ஓட்டிய புகார்தாரர் 75 வயது மதிக்கத்தக்க நபர் என்றால் சம்பவத்தின் போது புகார்தாரருக்கு வயது 62. எனக்கு தேவகோட்டை அரசு மருத்துவமனையிலிருந்தோ, காரைக்குடி காவேரி மருத்துவமனையிலிருந்தோ தகவல் வரவில்லை என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் பள்ளிக்கூடம் விடும் நேரம் என்றால் சம்பவ நேரம் மாலை 06.45 பள்ளிக்கூடம் விடப்பட்டிருக்க வாய்ப்புண்டு. நான் சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றும் வாதி வேகமாக வாகனத்தை ஓட்டி சாலையிலிருந்த பள்ளத்தில் விழுந்து கீழே விழுந்ததில் தான் வாகனத்தில் ஏற்பட்ட சேதமும் புகார்தாரர் மற்றும் அவருடைய பேத்திக்கு ஏற்பட்ட காயங்களும் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

3. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடம் அனைத்து பேருந்துகளும் நின்று போகும் பேருந்து நிறுத்தம் உள்ள இடம் என்றால் சரிதான். அனைத்து பேருந்துகளும் அந்த இடத்தில் நின்று செல்வதால் எதிரி ஓட்டி வந்த பேருந்தை அதிவேகமாகவோ, அஜராக்கியதையாகவோ ஓட்டி வந்திருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கு கோப்புகள் அனைத்தும் பின்தேதியிட்டு முன்பாகவே தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.